பதிவு எண் : M. 6311 ★ தொலைபேசி : 51331 நிறுவியது : 1953 ★ விலை 7 காசு ★ இலங்கையில் 10 சதம்

# நம்நாடு

The 'Nam Nadu' — A Tamil Daily
The Official Organ of the D. M. K.

ஆசிரியர் : இரா. செழியன் எம். ஏ. எம்.பி.

மலர் : 16] சென்னை : புரட்டாசி 29 (15—10—68) செவ்வாய் ★ வெளியூர் : புரட்டாசி 30 (16—10—68) புதன் [இதழ் : 99

### பள்ளிமேற்பார்வையாளர் ஓய்வு பெறும் வயது

நகராட்சி மன்றங்களில் பணியாற்றும் துவக்கப் பள்ளிகளின் மேற்பார்வையாளர்களின் ஓய்வு பெறும் வயதை 55-லிருந்து 58-ஆக உயர்த்தத் தமிழக அரசு முடிவு செய்திருக்கிறது.

நகராட்சி மன்றத்திலுள்ள எல்லா ஆசிரியர்களின் ஓய்வு பெறும் வயதும் 58 ஆகவே தற்போது இருக்கிறது.

இந்த மேற்பார்வையாளர்கள், செகண்டரி கிரேடு ஆசிரியர்கள், தலைமையாசிரியர்கள் ஆகிய பதவிகளிலிருந்தே நியமிக்கப்படுகிறார்கள்.

# ஐ. நா.-வில் அண்ணா

## இந்திரா உரையைக் கேட்டார்

நியூயார்க், அக். 15—

ஐ. நா. பொதுப் பேரவையில் இந்தியத் தலைமையமைச்சர் இந்திரா காந்தி பேசுகையில், தமிழக முதலமைச்சர் அறிஞர் அண்ணா அவர்கள், சிறப்பு அமைப்பாளர்கள் அமரும் இடத்தில் அமர்ந்திருந்து பேச்சைக் கேட்டார்கள்.

இந்திரா காந்தி உரையாற்றும்போது அயல்நாட்டுத் தூதுவர்கள், இராஜதந்திரிகள், பார்வையாளர்கள் ஆகியோர் அமரும் இடங்களெல்லாம் நிரம்பியிருந்தன.

அண்ணா அவர்கள், இந்திரா காந்தியின் உரையை உன்னிப்பாகக் கேட்டுக்கொண்டிருந்தார்.

### இந்திரா பேருரை

வட வியட்நாமில், அமெரிக்கா குண்டு வீச்சை நிறுத்த வேண்டும் என்றும், செக்கோஸ்லோவேகியாவில் அமைதி நிலை உடனடியாக ஏற்படவேண்டும் என்றும் தலைமை அமைச்சர் இந்திரா, ஐ. நா. பேரவையில் பேசுகையில் வேண்டுகோள் விடுத்தார்.

125 நாடுகள் அடங்கிய ஐ. நா. பேரவையில் 4,000 வார்த்தைகள் கொண்ட சொற்பொழிவைத் தலைமையமைச்சர் ஆற்றினார்.

"ஆயுதப் படையெடுப்புகளை நிறுத்தாமல் -- உலகிலுள்ள நாடுகளின் உரிமைகளை மதிக்காமல் இருந்தால், உலகத்தில் சண்டைச் சச்சரவுகளையும், மாச்சரியங்களையும் எப்படிப் போக்க முடியும்" என்றும் அவர் வினவினார். மேலும் அவர் குறிப்பிட்டதாவது :—

### ஏற்றத் தாழ்வு குறைந்ததா ?

"பணக்கார நாடுகளுக்கும் ஏழை நாடுகளுக்குமிடையே உள்ள ஏற்றத் தாழ்வு, ஏற்கனவே உலகில் பதட்ட நிலையையும், மனக்கசப்பையும் உண்டுபண்ணியிருக்கிறது ; இந்த ஏற்றத் தாழ்வு குறையவில்லை ; அதற்கு மாறாக அதிகரித்துக்கொண்டிருக்கிறது.

"இந்த நிலைமை, உலகத்தின் எதிர்கால நல்வாழ்வுக்கு அபாயத்தை உண்டுபண்ணக்கூடும்.

"செல்வ நிலையில் உள்ள நாடுகளில் வசிப்பவர்களைவிடப் பின்தங்கிய நாடுகளில் உள்ள நாங்கள் இந்த அபாயத்தை அதிகமாக உணர்ந்திருப்பது இயற்கையே ! நமது வாயிலிலேயே இந்த அபாயம் இருக்கிறது ! மற்றவர்களுக்கும் இந்த அபாயம் வெகு தூரத்தில் இல்லை !

### நிர்ப்பந்தம் நிலவுவதேன் ?

கோட்பாடுகளைவிட வெறும் படை பலமே மேலோங்கி இருப்பதாகத் தோன்றுகிறது.

மரியாதையைப் பெறுவதை விடக் கீழ்ப்படியச் செய்யும் நிர்ப்பந்தம் காணப்படுகிறது.

படை பலத்தைத் துறக்க முயன்றவர்கள், இதற்கான விலையைத் தர வேண்டியிருக்கிறது.

### 1970---சமாதான ஆண்டாக இருக்கக்கூடாதா ?

ஐக்கிய நாடுகள் நிறுவனம் ஏற்பட்டு 1970-ல் 25 ஆண்டுகள் நிறைவு பெறுகிறது.

மனித வர்க்கத்துக்கு நீண்ட சமாதானத்தை அளிப்பதற்கு ஒன்றுபட்ட முயற்சியைக் குறிக்கும் துவக்கமாக அதை, 'சமாதான ஆண்டு' ஆகக் கடைபிடிக்கக் கூடாதா ?"

## அண்ணா சென்னை திரும்புவது எப்போது ?

### நெடுஞ்செழியன் தரும் தகவல்

"முதலமைச்சர் அண்ணா அவர்கள், அடுத்த திங்கள் முதல் வாரத்தில் சென்னை திரும்பக் கூடும்"

என்று அமைச்சர் திரு. இரா. நெடுஞ்செழியன் அவர்கள், செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

"இத்திங்கள் 24-ஆம் நாள் நடைபெறவிருக்கும் உடல் பரிசோதனை முடிந்த பின்னர்தான் அண்ணா எப்போது திரும்புவார் என்பது திட்டவட்டமாகத் தெரியும்" என்றார்.

டாக்டர்கள் ஆலோசனைக்கிணங்க, அண்ணா சென்னை திரும்பியதும், இங்கு அவர் உடல்நிலைக்கேற்ப தட்பவெப்ப சாதனங்கள் அமைக்கப்பட்ட பெரிய தோட்டம் உள்ள வீடு ஏற்பாடு செய்யப்படுவதாகவும், அமைச்சர் திரு. ஏ. கோவிந்தசாமி அவர்களின் வீடு அண்ணா அவர்களுக்கு ஒதுக்கப்படலாம் என்றும், திரு. கோவிந்தசாமி வேறு வீட்டுக்கு மாறுவார் என்றும் திரு. நெடுஞ்செழியன் கூறினார்.

அண்ணா அவர்கள் பயணம் செய்ய தட்பவெப்ப சாதனம் பொருத்தப்பட்ட கார் ஏற்பாடு செய்யப்படுவதாகவும் அவர் கூறினார்.

## பரிசுச் சீட்டுத் தொகை

### அக்டோபர் 17-ல் பெற்றுக் கொள்ளலாம்

சென்னை, அக். 15—

தமிழக அரசின் பரிசுச் சீட்டுக் குலுக்கல் நேற்று வெற்றிகரமாக நடைபெற்று முடிந்துள்ளது.

முதல், இரண்டாம் பரிசு பெற்றவர்களுக்குப் பரிசளிக்கத் தனி விழா ஏற்பாடு செய்யப்படும்.

மற்றப் பரிசுகளுக்குரியோர், அக். 17-ம் நாளன்றே, அதற்குப் பிறகோ வந்து பரிசுத் தொகையைப் பெற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கிறார்கள்.

பரிசுக்குரிய எண்ணுள்ள டிக்கெட் யாரிடம் இருக்கிறதோ அவருக்குத்தான் பரிசு கொடுக்கப்படும்.

# காவிரித் தாய்ச் சிலை---

## வெறும் விளையாட்டு பொம்மையல்ல

### சுப்பிரமணியம் பேச்சு காங்கிரசுக்கு ஓட்டு வாங்கித் தருமா ?

#### பொறுப்பற்ற குற்றச்சாட்டுக்கு இரா. நெடுஞ்செழியன் பதில்

சென்னை, அக். 15—

"தமிழ்நாடு காங்கிரசுத் தலைவர் சி. சுப்பிரமணியம் அவர்கள், ஒரு கூட்டத்தில் பேசுகையில், 'இன்னும் சென்னைக்குக் குடிநீர் கொண்டுவரத் திட்டம் போடவில்லை ; காவிரியிலிருந்து கொண்டுவருவதா — கிருஷ்ணாவிலிருந்து கொண்டுவருவதா என்ற முடிவே இன்னும் எடுக்கவில்லை ; எனவே, காவிரிப் பொம்மையை வைத்து மக்களை ஏமாற்றுகிறார்கள்' என்று பேசியிருக்கிறார்.

"திட்டம் முடிவாயிற்று — ஆகவில்லையா என்று சொல்லும் இடத்தில் இப்பொழுது கருணாநிதி இருக்கிறார் — சுப்பிரமணியம் இல்லை ; 'திட்டம் இருக்கிறதா இல்லையா' என்பதை எங்களைப் போன்றவர்களிடம் சுப்பிரமணியம் கேட்டிருந்தால் சொல்லியிருப்போம்.

"இத்திட்டத்திற்கான எல்லா ஏற்பாடுகளும் செய்யப்பட்டு, டில்லியின் கையெழுத்திற்காக அனுப்பப்பட்டிருக்கிறது ; இதை, சட்டமன்றத்தில் பல தடவை கூறியிருந்தும், 'திட்டமே இல்லை ; அதற்கான ஆய்வே இல்லை' என்று சுப்பிரமணியம் சொல்லுகிறார்.

"இதற்காகக் காவிரி அம்மன் சிலை வைத்துத் தகுதிவாய்ந்த முதலமைச்சர் தலைமையில் நடத்திய விழா — அரசாங்க அதிகாரிகளெல்லாம் கலந்துகொண்ட விழா — திட்டமில்லாமலா நடக்கும் ? சும்மாவா பொம்மை வைப்போம் ? அப்படி வைப்பதாக இருந்தால் தெருவுக்குத் தெரு வைத்திருப்போமே !

"அரசாங்க நடவடிக்கைகளைத் தெரிந்திருந்தும் — அரசாங்கத்தின் திட்டம் எப்படி இருக்குமென்பதை அறிந்திருந்தும் — வேண்டுமென்றே சுப்பிரமணியம் இப்படிப் பேசினால், வாக்குகள் யாருக்குக் கிடைக்கும் ? சுப்பிரமணியம் பேச்சு, அவர் மனச்சாட்சிக்கு விரோதமான பேச்சாகும்."

இவ்வாறு, கழக அவைத் தலைவர் திரு. இரா. நெடுஞ்செழியன் அவர்கள், 86-வது வட்டத் தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் உரையாற்றுகையில் சுட்டிக்காட்டி விளக்கிக் கூறினார்.

# புரளி கிளப்பினர் காங்கிரசார்

## புரட்சிச் சாதனைகளைப் புரிந்தது கழகம் !

சென்னை, அக். 15---

"தி. மு. கழகம் ஆட்சிக்கு வந்தால், இருக்கின்ற பள்ளிகளையெல்லாம் மூடிவிடும் என்றெல்லாம் காங்கிரசார் பேசினர் ; ஆனால் கழகத்தினர், ஏராளமான பள்ளிகளைத் திறந்துவைத்ததோடு மட்டுமல்ல -- படிக்கின்ற பிள்ளைகளுக்கு நல்ல பல வசதிகளையும் செய்து தந்திருக்கிறது !

"கடந்த ஆண்டில் முதல் வகுப்பிலிருந்து ஐந்தாம் வகுப்புவரை படிக்கும் ஏறத்தாழ 2-இலட்சம் சிறுவர்களுக்கு ரூ. 6-இலட்சம் செலவில் இலவசமாகக் கரும்பலகை-- புத்தகம்---நோட்டுப் புத்தகம்---எழுதுகோல் வழங்கியிருக்கிறது !

"இந்த ஆண்டோ, முதல் வகுப்பிலிருந்து எட்டாம் வகுப்புவரையில் படிக்கும் 3-இலட்சம் பிள்ளைகளுக்கும் கரும்பலகை---புத்தகம்--நோட்டுப் புத்தகம் ஆகியவற்றை ஏறத்தாழ ரூ. 9-இலட்சம் செலவில் வழங்கியிருக்கிறது."

இவ்வாறு பொதுப் பணித் துறை அமைச்சர் மு. கருணாநிதி அவர்கள், பிரிக்ளின் சாலையில் அமைக்கப்பட்டுள்ள மாநகராட்சியின் பள்ளியின் துணைக் கட்டிடத் திறப்பு விழாவில் கலந்துகொண்டு பேசுகையில் விளக்கிக் கூறினர்.

# மங்களூர் நகராட்சியில் காங்கிரசு படுதோல்வி !

மங்களூர், அக். 15—

சென்ற கிழமை மங்களூர் நகராட்சிக்கு நடைபெற்ற தேர்தலில் காங்கிரசுக் கட்சி படுதோல்வியடைந்திருக்கிறது.

35 உறுப்பினர்களைக் கொண்ட இந்நகராட்சியில் 26 இடங்களுக்கான தேர்தல் நடைபெற்று, முடிவுகள் அறிவிக்கப்பட்டுள்ளன. 9 இடங்களுக்கான தேர்தல் உயர் நீதிமன்றத் தடையின் காரணமாக நடைபெறவில்லை.

அறிவிக்கப்பட்ட 26 இடங்களிலும் காங்கிரசுக் கட்சிக்கு 7 இடங்களே கிடைத்துள்ளன.

இதுவரையில் இந்த நகராட்சி, 25 உறுப்பினர்களைக் கொண்ட காங்கிரசுக் கட்சியின் ஆதிக்கத்தில்தான் இருந்தது.

நம்நாடு
இரா. செழியன்

திருவள்ளுவராண்டு 1999 புரட்டாசி 29 (15—10—68) செவ்வாய்

# மாநகராட்சி மன்றத் தேர்தல்---
# கழகத்தவர் கடமை

நடைபெற உள்ள மாநகராட்சித் தேர்தலில் போட்டியிடக் கூடியவர்களின் பட்டியல் இறுதியாகிவிட்டது. மொத்தமுள்ள 120 இடங்களுக்கு 395 பேர்கள் போட்டியிடுகின்றனர்.

96 இடங்களில் கழகத் தோழர்கள், அதிகாரபூர்வமான வேட்பாளர்களாகத் தேர்தலில் பங்குகொண்டிருக்கின்றனர்; மீதமுள்ள 24 தொகுதிகளில் கழக ஒத்துழைப்புடன் தோழமைக் கட்சிகளைச் சேர்ந்தவர்கள் போட்டியிடுகின்றனர்.

கழகத்தின் சார்பில் அதிகாரபூர்வமான வேட்பாளர்களாகப் போட்டியிடக்கூடிய தோழர்களின் வெற்றிக்கு ஆர்வத்துடனும், அக்கறையுடனும் எந்த அளவுக்கு உழைப்பார்களோ -- அதிலும் மிகுதியான அளவுக்குத் தோழமைக் கட்சிகளின் சார்பில் போட்டியிடக்கூடிய வேட்பாளர்களின் வெற்றிக்கும் ஊக்கமுடன் உழைத்திட வேண்டியது, அந்தத் தொகுதியிலிருக்கின்ற கழக உறுப்பினர்களின் தலையாய கடமையாகும். இத்தலையாய கடமையை, கழகத் தோழர்களும், ஆதரவாளர்களும் தெளிவாக உணர்ந்து பாடுபடக் கூடியவர்கள் என்பது, சென்ற பொதுத்தேர்தலின் வாயிலாக நிலை நாட்டப்பட்டுள்ளது. எனவே, இக்கடமையைக் குறித்துக் கழகத் தோழர்களுக்கும், ஆதரவாளர்களுக்கும் திரும்பத் திரும்ப வலியுறுத்திக் கூறத் தேவையே இல்லை.

கழகமும், தோழமைக் கட்சிகளும் கூட்டாக இணைந்து 120 இடங்களிலும் வேட்பாளர்களை நிறுத்தியுள்ளன. இவர்களை எதிர்த்துத் தொகுதிகள் அனைத்திலும் தனது கட்சியின் சார்பில் வேட்பாளர்களை நிறுத்தியிருக்கிறது காங்கிரசுக் கட்சி. இப்படி 120 இடங்களிலும் சொந்தக் கட்சியின் சார்பில் வேட்பாளர்களை நிறுத்தியிருப்பதன் மூலம் பொதுத்தேர்தலுக்குப் பின்னரும்கூடதான், இளையாமல் - சிதருமல் பெரிய அரசியல் கட்சியாகத்தான் இருந்துவருகிறது என்பதை விளம்பரப்படுத்திக்கொள்ளக் காங்கிரசு முனைந்திருக்கிறது!

காங்கிரசுக் கட்சியைப்போன்றே கழகத்தால் 120 இடங்களிலும் அந்தக் கட்சியை எதிர்த்து வேட்பாளர்களை நிறுத்தியிருக்க முடியும்; ஆனால், தோழமைக் கட்சிகளுக்கும் தனக்கும் ஏற்பட்டிருக்கின்ற அன்புப் பிணைப்பைப் பேணிப் பாதுகாத்துவர வேண்டும் என்ற நல்லெண்ணம் கழகத்திற்கு எப்பொழுதும் உண்டு. தனக்கு இயல்பாக இருந்துவரக்கூடிய அந்த நல்லெண்ணத்தை, இம்மாநகராட்சி மன்றத் தேர்தலிலும், தோழமைக் கட்சிகளுச்கும் -- அவைகளுக்குரிய உரிமையை மதித்து அவைகளுடைய விருப்பத்தை நிறைவேற்றிவைத்திருப்பதன் வாயிலாக -- மீண்டும் உறுதி செய்து கொண்டிருக்கிறது.

பொதுத் தேர்தலின்போது செயல்பட்டதுபோன்றே, கழகமும் -- தோழமைக் கட்சிகளும், இம்மாநகராட்சி மன்றத் தேர்தலிலும் -- காங்கிரசுக் கட்சி எதிர்பார்த்திருந்ததுபோல் -- பிளவுபட்டுப் போகாமல் கூட்டாக இணைந்து, அக்கட்சியை அனைத்துத் தொகுதியிலும் எதிர்த்து நிற்பதைக் கண்டதும், காங்கிரசுக் கட்சித் தலைமைக்கு ஏமாற்றமும், எரிச்சலும் ஏற்பட்டிருக்கிறது. கழகமும் தோழமைக் கட்சிகளும் ஒருங்கிணைந்து ஒற்றுமையாகக் காங்கிரசுக் கட்சியை எதிர்ப்பதனுல், தன் கட்சிக்குப் பெரியதோர் வீழ்ச்சியாக முடியுமே என்பதைத் தெளிவாகத் தெரிந்துகொண்டிருக்கின்ற காங்கிரசுக் கட்சித் தலைமை. கட்சிகளின் இக்கூட்டைப் பற்றி ஏளனமாகவும், கிண்டலாகவும் ஏசுவதில் முனைந்துள்ளது.

காங்கிரசுக் கட்சியை அனைத்துத் தொகுதிகளிலும் எதிர்த்து நிற்கக் கழகமும் -- தோழமைக் கட்சிகளும் கூட்டாக இணைந்திருப்பதனுல் தனக்கு ஏற்படக்கூடிய பெரும் தோல்வியை இப்பொழுதே நினைத்து நினைத்துக் கண்களைப் பிசைந்துகொண்டிருக்கின்ற காங்கிரசுத் தலைமைக்குச் சிறிதளவு நம்பிக்கையும், ஆறுதலும் தெம்பும் தரக்கூடிய வகையில், 32 தொகுதிகள் நீங்கலாக எஞ்சியிருக்கின்ற 88 தொகுதிகளில், சுயேச்சைகள் என்ற பெயரால் சிலர் போட்டியிடத் துணிந்திருக்கின்றனர். தண்ணீரில் மூழ்கிக்கொண்டிருக்கின்றவன் சிறு துரும்பைக் கண்டதும், அதைப் பற்றிக்கொண்டு தன் உயிரைக் காப்பாற்றிக்கொள்ளலாம் என நம்பிக்கை கொள்ளுவதுபோல், காங்கிரசுத் தலைமையும் -- இந்த சுயேச்சைகளின் போட்டியில் நம்பிக்கை வைத்து -- சுயேச்சைகளுக்கு வாழ்த்தும் வரவேற்பும் கூறிக்கொண்டிருக்கிறது.

யார் இந்த சுயேச்சைகள்? ஏன், 'சுயேச்சை'கள் என்ற போர்வையில் தேர்தலில் போட்டியிட முனைந்திருக்கின்றனர்?

தனி மரம் தோப்பாகாது! தனியாக நிற்கக்கூடிய பனைமரத்தின் நிழலில் ஒருவர்கூட இளைப்பாற முடியாது!

குறிப்பிட்ட ஒரு வட்டத்தில், 'காங்கிரசு -- கழகம் அல்லது தோழமைக் கட்சிகளைச் சேர்ந்தவர்' என்ற முறையில் நேரடிப் போட்டி இருந்தால்தான், காங்கிரசுக் கட்சிக்கு எதிராக உள்ள வாக்குகள் சிதறிப் போகாமல் இருந்திடும். 'காங்கிரசு வேட்பாளருக்குத்தான் வாக்கு அளிப்பது' என்றும் 'கழக வேட்பாளருக்குத்தான் வாக்கு அளிப்பது' என்றும் முன்கூட்டியே முடிவு செய்துகொண்டிருக்கின்ற வாக்குகள் சிதறிவிடுவதற்கு வழியே கிடையாது. ஆனால், இப்படிக் கட்சிப் பாகுபாட்டில் பிரிந்திருக்கின்ற வாக்குகளைப் பொறுத்து மட்டுமே தேர்தலில் போட்டியிடக் கூடிய கட்சிகளின் வெற்றி -- தோல்வி அமைந்துவிடுவதில்லை. கட்சிச் சார்பற்ற வாக்காளர்களின் வாக்குகள்தான், ஏதாவது ஒரு கட்சியின் வெற்றிக்கும் -- தோல்விக்கும் குறிப்பிட்ட அளவுக்குத் துணைபுரிந்திருக்கின்றன.

இதுமட்டுமல்லாமல், காங்கிரசுக் கட்சிக்கு எதிராக இருக்கின்ற வாக்காளர்களில், கழகத்தை ஆதரிப்பவர்களும் உள்ளனர் -- சுதந்திராக் கட்சிக்கு வாக்கு அளிப்பவர்களும் உள்ளனர்; லீக், பொதுவுடைமைக் கட்சி போன்ற தோழமைக் கட்சிகளின் வெற்றியைத் தேடுகின்றவர்களும் உள்ளனர். ஒரு வட்டத்தில் அல்லது தொகுதியில், காங்கிரசுக் கட்சிக்கு எதிரான வாக்குகளைப் பெறுவது எனக் காரணம் காட்டிக் கழகமும், மற்ற தோழமைக் கட்சிகளும் தனித்தனியாக வேட்பாளர்களை நிறுத்தினுல், தனித்தனியாக மற்ற கட்சிகள் வாங்கியிருப்பதைவிட ஒரே ஒரு வாக்கு கூடுதலாகப் பெற்றிருந்தாலும் -- அப்படிப் பெற்றிருக்கின்ற வாக்குகள் பதிவான மொத்த வாக்குகளில் மிகவும் குறைவாக இருந்திட்டாலும், இந்த வட்டத்தில் போட்டியிடக்கூடிய காங்கிரசுக் கட்சியே வெற்றி பெற்றுவிட்டதாக ஏற்பட்டுவிடும். அந்த வட்டத்தில் பதிவான மொத்த வாக்குகளில், போட்டியிட்ட கட்சிகள் அனைத்தும் வாங்கியுள்ள மொத்த வாக்குகளின் எண்ணிக்கையைவிடப் பல மடங்கு குறைவான வாக்குகளை மட்டுமே பெற்றிருந்தாலும், காங்கிரசுக் கட்சிக்கே வெற்றி என்ற நிலை உருவாகிவிடும்.

மொத்தம் பதிவான வாக்குகளில், காங்கிரசுக் கட்சிக்கு எதிரான வாக்குகள்தான் அதிகம் என்பது, காங்கிரசு நீங்கலாக மற்ற அரசியல் கட்சிகள் பெற்றிருக்கின்ற வாக்குகளிலிருந்து விளக்கமாகத் தெரிகிறது. இருந்தாலும், எதிரான வாக்குகள் கழகத்துக்குக் கொஞ்சம் -- பொதுவுடைமைக் கட்சிக்குக் கொஞ்சம் -- முஸ்லிம் லீகுச்கும் சுதந்தராவுக்கும் சிறிதளவு, சிறிதளவு எனப் பிளவுபட்டுவிட்டதால், பதிவான மொத்த வாக்குகளில் குறைந்த வாக்குகளைப் பெற்ற காங்கிரசுக் கட்சி, வெற்றியைத் தட்டிப் பறித்துக்கொள்ளக்கூடிய துர்ப்பாக்கிய நிலை ஏற்பட்டுவிடுகிறது.

சென்ற பொதுத் தேர்தல் வரையில், காங்கிரசுக் கட்சிக்குக் கிடைத்துவந்திருக்கின்ற வெற்றியில் மறைந்துகிடக்கின்ற இந்த அரசியல் சூட்சுமத்தை, அறிஞர் அண்ணு அவர்கள் தெளிவாக உணர்ந்துகொண்டார்கள். காங்கிரசு வெற்றி பெற்றுவருவதன் இரகசியத்தை அறிஞர் அண்ணு அவர்கள் தெளிவாகத் தெரிந்து கொண்ட அளவுடன் மனநிறைவு பெற்றுவிடவில்லை. காங்கிரசுக் கட்சியை எதிர்த்து நிற்கக்கூடிய மற்ற அரசியல் கட்சிகளுக்கிடையில் ஒற்றுமையை உருவாக்கவும், பாதுகாத்து வரவும் தமக்குள்ள அறிவாற்றலை முழு அளவுக்குப் பயன்படுத்தினுர். அண்ணுவின் முயற்சி, சென்ற பொதுத் தேர்தலில் நல்ல பலனைக் கொடுத்தது. இதற்கு மேலுமா விளக்கம் வேண்டும்?

சென்ற பொதுத் தேர்தலின்பொழுது அறிஞர் அண்ணு அவர்கள் உருவாக்கி உயிரூட்டிய அதே சிறந்த வழியை இம்மாநகராட்சிமன்றத் தேர்தலிலும், தேர்தல் பணியைப் புரிந்திடப் பொறுப்பேற்றுக்கொண்ட கழகத் தலைவர்களும் பின்பற்றி, கழகத்துக்கும் -- தோழமைக் கட்சிகளுக்குள்ளும் ஒற்றுமையையும், தோழமை உணர்வையும் உறுதிப்படுத்தினர். வட்டங்களை ஒதுக்கித் தருவதிலும் மகத்தான வெற்றியைக் கண்டனர்.

உண்மை நிலை இவ்வாறு இருந்திட, கழகத்தைச் சேர்ந்த சிலர், 'சுயேச்சை' என்ற பட்டத்தைச் சுமந்துகொண்டு, ஏறத்தாழ இருபது வட்டங்களில் வேட்பாளர்களாகப் போட்டியிடத் துணிந்திருக்கின்றனர். இவர்கள் அனைவரும், 'சுயேச்சை' என்ற போர்வையில் ஏன் தேர்தலில் போட்டியிடுகின்றனர் --- இவர்களுக்குப் பின்னணி பலமாக இருந்துவருகிறவர்கள் யார் --- இவர்கள் வாக்காளர்களிடம் என்ன கூறி தங்களுக்கு ஆதரவு தேடுகின்றனர் -- என்பதற்கெல்லாம் விளக்கம் தேவையே இல்லை.

இவர்கள் அனைவரும் தவருன பாதையில் கால் வைத்துள்ளனர். விரல்விட்டு எண்ணக்கூடிய இந்த 'மாவீரர்'களின் போக்கும், கழகத்துக்கு விடப்பட்டுள்ள அறைகூவலாகும். அந்தந்த வட்டத்திலிருக்கின்ற கழகத் தோழர்கள், இந்த 'மாவீரர்'களால் கழகத்திற்கு விடப்பட்டிருக்கின்ற அறைகூவலை, உள்ளது உள்ளவாறு உணர்ந்துகொள்ள வேண்டும். கழகத்துக்கு அறைகூவல் விடுத்திருக்கக்கூடிய 'இம்மாவீரர்'களுக்கு, நல்ல பாடத்தைக் கற்பிக்க வேண்டும். கழகத் தோழர்களின் முதற் கடமை இதுதான்.

—கா. க.

## சென்னை -- திருவள்ளூர் மின்சார இரயில் பாதை

### நான்காம் திட்டத்தில் இடம்பெறும்?

சென்னை, அக். 14—

"சென்னை—கூடூர்; சென்னை—திருவள்ளூர் பாதைகளில் மின்சார இரயில்கள் விடுவதற்கான ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன; அநேகமாக நான்காவது திட்டத்தில் இது நிறைவேற்றப்படும்"

என்று தென்னிந்திய இரயில்வே அதிகாரி நாராயணன் தெரிவித்துள்ளார். மேலும் அவர் தெரிவித்ததாவது:—

சென்னை—கூடூர் 'சர்வே' வேலை ஏற்கனவே முடிந்துவிட்டது! இதற்கு இரயில்வே வாரியத்தின் அனுமதி எதிர்பார்க்கப்படுகிறது.

சென்னை—திருவள்ளூர் பாதையை மின்சாரமயமாக்க ஆகும் செலவு -- மதிப்பீடுகள், இரயில்வே வாரியத்தின் அனுமதிககாக அனுப்பப்பட்டுள்ளன.

சென்னை—பம்பாய்; சென்னை—கொச்சி பாதைகளில் நீராவி எஞ்சின்களுக்குப் பதில் இரயில்களில் டீசல் எஞ்சின்களை இணைப்பதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

சென்னை—பெங்களூர் பிருந்தாவன் எச்ஸ்பிரஸ் வண்டியின் வேகம் இன்னும் அதிகரிக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது.

## 'தொழிலாளர்கள் திண்டாடும் அவலநிலையைச் சகியோம்'

## 'மூடிய ஆலைகளைத் திறக்க முடிந்தவரை முயற்சி செய்கிறேம்'

### கோவையில் சட்ட அமைச்சர் மாதவன் விளக்கம்

கோவை, அக். 15—

**"தி. மு. கழக அரசு பாட்டாளிகள் அரசு; இங்கு தொழிலாளிகள் வேலையில்லாது திண்டாடும் அவலநிலையை எங்களால் சகிக்கமுடியாது; மூடியுள்ள ஆலை பிரச்சினை குறித்துத் தமிழக அரசு, முடிந்த அளவுக்கு எல்லா முயற்சிகளையும் எடுத்து வருகிறது.**

**"அண்மையில் மொரார்ஜி தேசாயை சந்தித்து இதுபற்றிப் பேசினேன். அவரும் இதற்கான எல்லா நடவடிக்கைகளையும் எடுப்பதாக உறுதி கூறியுள்ளார்; உற்பத்திச் செலவு அதிகரிப்புக்கு அடிப்படைக் காரணமாக உள்ள 'எக்சைஸ்' வரியைக் குறைப்பது பற்றி ஆலோசிப்பதாகவும் கூறியுள்ளார்: அவரது பதில் கிடைத்ததும் மீண்டும் ஆலைகளைத் திறக்க உடனடியாக ஏற்பாடு செய்யப்படும்.**

**"ஆலைப் பிரச்சினையை ஒரு அரசியல் பிரச்சினையாகக் கருதாமல் பொருளாதாரப் பிரச்சினையாகக் கருதவேண்டும்; இதில் அனைத்துக் கட்சியினருக்கும் பங்கு உண்டு, அரசியல் இலாபத்துக்காகத் தொழிலாளர்களின் வாழ்வோடு விளையாடக் கூடாது!"**

இவ்வாறு சட்ட அமைச்சர் செ. மாதவன் அவர்கள், கோவை—இராமநாதபுரத்தில் நடைபெற்ற அண்ணு பிறந்தநாள் விழாக் கூட்டத்தில் பேசுகையில் தெள்ளத் தெளிவுற விளக்கினுர். இது பற்றி அவர் மேலும் குறிப்பிட்டதாவது:—

"தற்போதையத் தமிழக அரசுதான் ஆலைப் பிரச்சினைக்குக் காரணம் என்று எப்படிக் கூறமுடியும்? முந்திய காங்கிரசு அரசு நூற்பாலைகளை அதிகமாகத் திறந்து நெசவாலைகளைத் திறக்காததும் ஒரு காரணமாகும்; நிர்வாகத்தில் ஏற்பட்ட அதிகமான ஒழுங்கீனங்களும் காரணமாகும்.

ஆலைப் பிரச்சினையில் காங்கிரசுக் கட்சிக்கு நிறைய பொறுப்பு இருக்கிறது; தமிழக அரசுமீது பழிசுமத்தும் சுப்பிரமணியத்துக்கும் பொறுப்பு இருக்கிறது; மத்திய அமைச்சர்கள் மொரார்ஜி தேசாய், தினேஷ் சிங் ஆகியோரைச் சந்தித்து திரு. சுப்பிரமணியம் போன்றவர்கள், கோரிக்கைளின் நியாயத்தை வலியுறுத்தி உடனடிப் பரிகாரம் காண ஏற்பாடு செய்யலாம்; அதைவிட்டுப் பொறுப்பைத் தட்டிக் கழிக்கலாகாது."

இந்தக் கூட்டத்தில் 28-வது வார்டு தோழர் பட்டாபி அவர்கன், அறிஞர் அண்ணுவுக்கு அறுவைச் சிகிச்சை அளித்த அமெரிக்க டாக்டர் மில்லருக்கு நன்றிப் பரிசாகத் தங்கப் பதக்கம் ஒன்றை அமைச்சர் மாதவன்மூலம் அனுப்புமாறு கொடுத்தார்.

கூட்டத்தில் கோவை மாவட்டச் செயலாளர் எஸ். ஏ. இராசமாணிக்கம், ஏ. என். சாமி, வழக்கறிஞர் கே. ஏ. கிருஷ்ணசாமி, ரங்கநாதன், மோகன், கோவிந்தராசன் எம்.எல்.ஏ., மருதாசலம் ஆகியோர் பேசினர்.

## தஞ்சை மாவட்டத்தில் வேளாண்மை வளர்ச்சிக் கழகம்

### அமைச்சர் கோவிந்தசாமி தகவல்

திருச்சி, அக். 14—

"அனைத்து நாட்டு வளர்ச்சிக்கான அமெரிக்க உதவியுடன் தஞ்சை மாவட்டத்தில், வேளாண்மை வளர்ச்சிக் கழகம் ஒன்றை நிறுவுவதற்கு விரைவில் ஒப்புதல் அளிக்குமாறு மத்திய அரசைத் தமிழக அரசு கேட்டுக்கொண்டிருக்கிறது.

தஞ்சை மாவட்டத்தில் சுமார் 20-இலட்சம் ஏக்கரில் நெல் பயிரிடப்படுகிறது; எனவே, வேளாண்மை வளர்ச்சிக் கழகத்தை அமைப்பதற்கு அதுவே மிகச் சிறந்த இடமாகும்"

என்று செய்தியாளர்களிடம், வேளாண்மைத் துறை அமைச்சர் ஏ. கோவிந்தசாமி அவர்கள் கூறினுர்.

# இந்தி வெறியர்கள் செவியில் ஏறுமா?

## அசாம் ஆளுநர் இடித்துரை

கௌஹாத்தி, அக். 11—

"தங்கள் தாய்மொழியின் வளர்ச்சியைக் கெடுக்கும் என்று கருதுபவர்கள் மீதும், இந்தியை விரும்பாதவர்கள் மீதும் அம்மொழி திணிக்கப்படுகிறது என்ற கருத்தினை ஏற்படுத்திவிடக் கூடாது.

"தாய்மொழிக்கு ஈடாக வேறு எந்த மொழியும் சமமாகாது; தேசிய மொழியாக ஒன்றை உருவாக்குவது வட்டார மொழியினை ஒழிப்பதற்காக அல்ல!

"இந்த நூற்றாண்டின் துவக்கத்தில் ஐரோப்பாவின் போது மொழியாக பிரெஞ்சு பேசப்பட்டு வந்தது; ஆனால், அந்த இடத்தை ஆங்கிலம் பிடித்துக்கொண்டு விட்டது. இன்று ஆங்கில மொழியைக் கற்றுக்கொள்ளாத நாடே இல்லை எனலாம்; உலகம் முழுவதும் ஆங்கிலம் பரவவேண்டும் என்பதற்காக யாரும் பிரசாரம் செய்யவில்லை; ஆனால், மக்களே விரும்பி அம்மொழியைக் கற்கிறார்கள்; ஒரு மொழி வளமாக இருப்பின், அதை மக்கள் தாமே முன்வந்து கற்பர் என்பதற்கு ஆங்கிலமே எடுத்துக்காட்டாகும்"

என்று, அசாம்-நாகாலாந்து ஆளுநர் பி. கே. நேரு அவர்கள் இந்தி வளர்ச்சிக் கழகத்தின் ஏழாவது பட்டமளிப்பு விழாவில் உரையாற்றுகையில் கருத்தறிவித்தார்.

### அசாம் முதலமைச்சர்

அசாம் முதலமைச்சர் பி. பி. சாலிகா பேசுகையில் குறிப்பிட்டதாவது:—

"நாட்டின் பல பகுதிகளிலும் இந்தியை மக்கள் எதிர்ப்பதற்கான அடிப்படைக் காரணத்தை ஆராய்ந்தறிய வேண்டிய நேரம் வந்துவிட்டது; இந்தி மொழி வட்டார மொழிக்குத் தொல்லையாக இல்லாமல் உதவியாக இருக்க வேண்டும்."

# அண்ணாவின் மருத்துவச் செலவு

## காங்கிரசாருக்கு கருணாநிதி பதில்

சென்னை, அக். 14—

"தஞ்சையிலே ஒரு காங்கிரசுப் பேச்சாளர் பேசியபோது, 'அண்ணாதுரை அமெரிக்காவிலே சிகிச்சை பெறுகிற பணம் யாருடைய அப்பன் வீட்டுப் பணம்?' என்று கேட்டாராம்! கழகத் தோழர்கள் இது கேட்டு ஆத்திரப்பட்டார்கள்!

"யாரோ 'ஏனோதானோ'க்கள் கேட்டதால் அதை நாங்கள் பொருட்படுத்தவில்லை ஆனால் இதே கருத்தை சுப்பிரமணியமோ, காமராசரோ கொண்டிருக்கமாட்டார்கள் என்று நம்புகிறேன்.

"அப்படி அவர்களது மனத்தில் ஒரு துளியாவது அந்த எண்ணம் தோன்றுமானால் அவர்களுக்குச் சொல்லிக்கொள்வேன்—

**அமெரிக்க மருத்துவச் செலவில் அரசின் செலவு அண்ணாவுக்கும், அவருடன் சென்ற டாக்டருக்கும்தான்!**

**அண்ணிக்கும் — பரிமளத்திற்கும், அவர்களுடன் சென்ற இரா. செழியனுக்கும், க. இராசாராமுக்கும் செய்யப்படும் செலவு கட்சியின் செலவு—அரசாங்கச் செலவு அல்ல என்று!**

"'அண்ணாவுக்குச் செய்யப்படும் செலவுகூட கட்சியின் செலவாகத்தான் இருக்கவேண்டும்' என்று சுப்பிரமணியமும், காமராசரும் சொல்வார்களானால், அதையும் ஏற்க நாங்கள் தயார்!

"அண்ணாவுக்கு இல்லாத பணமா—அண்ணாவுக்கு இல்லாத கட்சியா? அண்ணாவுக்கு இல்லாத பணம் எதற்கு?

"ஆகவே, சுப்பிரமணியமும், காமராசரும் இதுபோன்ற காங்கிரசுக்காரர்களின் மட்டரகப் பிரச்சாரத்தைத் தடுத்து நிறுத்தட்டும்; இல்லையேல் பகிரங்கமாக, 'அண்ணாவுக்கு அரசாங்கப் பணத்தைச் செலவழிக்கக் கூடாது' என்று கூறட்டும்! அந்தச் செலவை கட்சி ஏற்றுக் கொள்ளத் தயார்!"

(106-வது வட்டத்தில் பேசியது)

# வேளாண்மைக் கல்லூரிகள்

## துவங்கும் நிலை பற்றி அமைச்சர் ஏ. கோவிந்தசாமி

திருச்சி, அக். 14—

"தமிழ் நாட்டில் எந்த மாவட்டத்திலாவது ரூ. 25 இலட்சமும்—நிலமும் நன்கொடையாகக் கொடுக்க, முன்வந்தால் அந்த மாவட்டத்தில் புதிய வேளாண்மைக் கல்லூரி ஒன்றை அரசு துவக்கும்.

"வடாற்காடு மாவட்டத்தில் கல்லூரி ஏற்படுத்தவதற்கு ஏற்றதாக இரண்டு இடங்கள் இருக்கின்றன; ஆனால், தேவையைத் தர அந்த மாவட்டம் முன்வரவில்லை.

"நெல்லை மாவட்டம் ரூ. 17 இலட்சம் கொடுக்க முன்வந்துள்ளது; ஆனால் தேவையான நிலம் கிடைக்கவில்லை"

என்று, வேளாண்மைத் துறை அமைச்சர் ஏ. கோவிந்தசாமி அவர்கள் தெரிவித்துள்ளார்.

# தியாகத்தைப் போற்றும் கழகத்தின் பண்பு

## காங்கிரசுத் தியாகிக்கு ரூ. 1,330 நிதியளிப்பு—தஞ்சையில் அமைச்சர் கருணாநிதி வழங்கினார்

தஞ்சை, அக். 14—

தஞ்சையைச் சேர்ந்த காங்கிரசுத் தியாகி சுப்பண்ணா அவர்களுக்குத் தஞ்சை நகர தி. மு. க. சார்பில் ரூ. 1,310 நிதி திரட்டிக் கொடுக்கப்பட்டது.

இந்நிதியைப் பொதுப்பணி அமைச்சர் கருணாநிதி அவர்கள், சுப்பண்ணாவிடம் அளித்தார்.

தஞ்சை திலகர் திடலில் இவ்விழா நடைபெற்றது.

விழாவிற்கு மாவட்டச் செயலாளர் மன்னை நாராயணசாமி தலைமைதாங்கினார்.

அமைச்சர் கருணாநிதி அவர்கள், பணமுடிப்பை வழங்கிப் பேசுகையில் கூறியதாவது:—

"தியாகி ஒருவரைச் சிறப்பிக்க இந்தக் கூட்டம் நடக்கிறது; சுப்பண்ணாவுக்கு ரூ. 1,310 நிதி திரட்டிக் கொடுத்திருக்கிறீர்கள்; இது பெருமைக்கு உரியது.

இப்போது நடப்பது திருக்குறள் ஆட்சி; திருக்குறளில் 1,330 குறள்கள் உண்டு; அதில் இருபது குறைவாக ரூ. 1,310 கொடுத்திருக்கிறீர்கள்; நான் அந்த 20 ரூபாயைத் தந்து நிறைவு செய்கிறேன்.

தொகை குறைவானதாக இருந்தாலும் இதயத்தில் நல்லெண்ணம் வளர்ந்திருக்கிறது!

தி.மு. கழகம் தியாகிகளைப் போற்றும் கழகம்! மாற்றுக் கட்சி தியாகிகளாக இருந்தாலும் அவர்களை மதிப்போம்!

"தி. மு. கழகத்திலும் தியாகிகள் பட்டியலுக்குப் பஞ்சமில்லை! மாற்றுக் கட்சிகளுக்கும் மரியாதை செலுத்தும் பொறுப்பை தி. மு. கழகத்திடம் அண்ணா ஒப்படைத்திருக்கிறார்!"

# புறநகர் பகுதியில் 50,000 வீட்டு மனைகள்

## வீடில்லாத ஏழைகளுக்கு வழங்கப்படும்

சிதம்பரம், அக். 15—

"சென்னை புறநகர்ப் பகுதிகளான தாம்பரம், திருவான்மியூர், அம்பத்தூர், ஆவடி ஆகிய இடங்களில் உள்ள புறம்போக்கு நிலங்களில் 50 ஆயிரம் வீட்டு மனைகள் பட்டா செய்து கொடுக்கப்படவிருக்கின்றன.

"ஏழை மக்களுக்கு உதவும் இத்திட்டத்தைத் துரிதப்படுத்தி—இதிலுள்ள சட்டச் சிக்கல்களையெல்லாம் நீக்கி—இன்னும் இரண்டே மாதங்களில் பட்டாக்கள் வழங்கப்படும்"

என்று வருவாய்த் துறை அமைச்சர் திரு. கே. ஏ. மதியழகன் தெரிவித்துள்ளார்.

சிதம்பரம் நகராட்சி எல்லையில் உள்ள காமராசர் நகர், பெரியார் நகர் ஆகியவற்றில் குடியிருப்போருக்கு வீட்டு மனைப் பட்டா வழங்கிப் பேசுகையில் அவர் மேலும் கூறியதாவது:—

"கடந்த ஆண்டில் 30 ஆயிரம் வீட்டு மனைகள் வழங்கப்பட்டன; இந்த ஆண்டு 50 ஆயிரம் மனைகள் வழங்கப்பட்டுள்ளன."

# தமிழ்ப் பண்பாட்டை எதிரொலிக்கும் அணுவிரத இயக்கம்

## அமைச்சர் நெடுஞ்செழியன் விளக்கம்

"அணுவிரத இயக்கத்தின் அடிப்படைக் கோட்பாடுகள், தமிழ்ப் பண்பாட்டிலும் நாகரிகத்திலும் புதைந்துள்ளன"

என்று, கல்வியமைச்சர் திரு இரா. நெடுஞ்செழியன் தெரிவித்தார்.

அனைத்திந்திய அணுவிரத 19-வது மாநாட்டின் இறுதி நாள் கூட்டத்தில் அமைச்சர் கலந்து கொண்டு பேசுகையில் மேலும் தெரிவித்ததாவது:—

"தமிழ்நாட்டில் இந்த இயக்கத்துக்கு இயற்கையாகவே வரவேற்பு இருக்கும் என்பதில் ஐயமில்லை.

"திருக்குறளைப் பரப்புவது அணுவிரதக் கோட்பாட்டைப் போதிக்கப் பெரிதும் உதவும்; எனவே, பல்வேறு இந்திய மொழிகளிலும் திருக்குறளை மொழி பெயர்க்கலாம்.

"மனிதனின் உள்ளம் தூய்மை அடைந்து எண்ணங்கள் உயர்ந்தாலன்றி, வெளிக் கட்டுபபாடுகளினால் பலன் ஏதும் இராது."

# நீதிமன்ற மொழியாகத் தமிழ்

## விரைந்து வழக்குகள் முடிய வகை செய்வீர்!

### வழக்கறிஞர்களுக்கு மத்திய சட்ட அமைச்சர் யோசனை

சிதம்பரம், அக். 15—

"நீதிமன்றத்தில் எல்லா நடவடிக்கைகளும் வட்டார மொழியில் தான் நடைபெறவேண்டும்.

"தமிழ் ஓர் சிறந்த மொழி; அந்த மொழியில்தான் வழக்கறிஞர்களும், பாமர மக்களும் தங்கள் கருத்துக்களை நன்றாக எடுத்துரைக்க வேண்டும்.

"எனவே, இனி தமிழ்நாட்டில், கீழ் நீதிமன்றங்களில் தமிழ் மொழியிலேயே எல்லா நடவடிக்கைகளையும் நடத்தவேண்டும்; இது பழக்கத்தில் வந்துவிட்டால் பின்னர் சரியாகிவிடும்.

"இதுபோல் இங்கிலாந்து நாட்டில் நூறு ஆண்டுகளுக்குமுன்பு, 'பிரெஞ்சுதான் சிறந்த மொழி' என்று கூறிவந்தார்கள்; பின்னர் ஆங்கிலம் பழக்கத்திற்கு வந்தபின்னர், 'ஆங்கில மொழி தான் சிறந்தது' என்று கூறுகிறார்கள்"

இவ்வாறு மத்திய சட்ட அமைச்சர் கோவிந்த மேனன், சிதம்பரம் வழக்கறிஞர் சங்கத்தின் 102-வது ஆண்டு விழாவுக்குத் தலைமை தாங்கிப் பேசுகையில் விளக்கிக் கூறினார். அவர் மேலும் குறிப்பிட்டதாவது:—

"இந்தியாவிலுள்ள எந்த மொழியும் அந்நிய நாட்டு மொழிகளுக்குக் குறைந்ததல்ல; அதனால் பிற மொழிகளை ஒதுக்க வேண்டுமென்று அர்த்தமல்ல! அந்நிய மொழிகளையும் கற்றுத் தேர்ந்து நமது நாட்டு மொழியை மேலும் வளமடையச் செய்ய வேண்டும். அப்போதுதான் உலக அரங்கில் இந்தியா சிறந்து விளங்க முடியும்.

தமிழ் நாட்டு வழக்கறிஞர் சிறந்தவர்கள்—மேதைகள்!

தற்பொழுது இந்த நாட்டிலுள்ள சட்டங்கள்—சட்டங்களைச் செயல்படுத்தும் முறைகள் ஆகியன வழக்குகளை வளர்த்துவதாக உள்ளன; அதனால் எல்லா நீதிமன்றங்களிலும் ஏராளமான வழக்குகள் தீர்வு பெறுமல் இருந்துவருகின்றன; இதனால் பொதுமக்கள் மிகவும் இன்னலடைகின்றனர்.

பொதுமக்கள் நலனைக் கருத்தில் கொண்டு, சட்டமன்றத்தில் அவ்வப்போது சட்டத் திருத்தங்கள்—நடைமுறை குறித்த திருத்தங்கள் கொண்டு வருவதற்கு வழக்கறிஞர்கள் உதவ வேண்டும்."

அமைச்சரை வழக்கறிஞர் சங்கத் தலைவரும், மாநிலங்களவையில் கழக உறுப்பினருமான தில்லைவில்லாளன் வரவேற்றார்.

# அரசு அலுவலர்கட்குக் குடியிருப்பு வசதி

## ரூ. 2 கோடி செலவில் தமிழக அரசு திட்டம்

கோவை, அக். 15—

"மாவட்டங்களிலும் வட்டங்களிலும் பணிபுரியும் அரசு ஊழியர்களுக்கு வீடுகள் கட்டித் தருவதற்குத் தமிழக அரசு திட்டமிட்டிருக்கிறது"

என்று சட்ட அமைச்சர் செ. மாதவன் அவர்கள், இங்கு மாநில வீட்டு வசதி வாரியம் ரூ. 12.7 இலட்சம் செலவில் கட்டியுள்ள புதிய குடியிருப்பைத் திறந்து வைக்கும் விழாவுக்குத் தலைமை தாங்கிப் பேசுகையில் தெரிவித்தார். அவர் மேலும் குறிப்பிட்டதாவது:—

"வீட்டு வசதி செய்து தருவதற்காக அரசு, புதிய சடன்களை வாங்க யோசித்து வருகிறது. குறைந்த வருவாயுள்ள ஊழியர்களுக்குக் குறைந்த வாடகையில் வீடு கிடைக்க இத்திட்டம் உதவும்.

இந்த வீட்டு வசதியை ஏற்படுத்தித் தர ரூ. 2 கோடி செலவாகும்; இந்தத் தொகையைக் கடன் மூலமே வசூல் செய்ய முடியுமோ என்ற கேள்வி எழுந்துள்ளது. மத்தியச் சேமிப்பு நிதியிலிருந்து கடன் கிடைக்கும் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது.

ஊழியர்களின் பஞ்சப் படியை உயர்த்துவதைக் காட்டிலும், அவர்களுக்கு வீட்டு வசதியும் குழந்தைகளுக்குக் கல்வி வசதியும் அளிப்பதே மிகச் சிறந்த உதவிகளாகும்.

வீட்டு வசதியைப் பெருக்குவதற்காக தமிழக அரசு இந்த ஆண்டு ரூ. 35 இலட்சம் ஒதுக்கியிருக்கிறது."

கோவையில் புதிதாகக் கட்டப்பட்டுள்ள 96 குடியிருப்பு மாடிகளை சுகாதார அமைச்சர் சாதிக் பாட்சா திறந்து வைத்தார்.

# சிறிய நீர்ப்பாசனத் திட்டங்களுக்கு ரூ. 600 கோடி!

## உற்பத்தியைப் பெருக்க மத்திய அரசு முயற்சி

### செகசீவன்ராம் விளக்கம்

காஞ்சி, அக். 11—

"நாட்டின் முன்னுள்ள உணவுப் பிரச்சினையைச் சமாளிக்கும் வகையில் போதுமான உணவுத் தானிய உற்பத்திக்காக விவசாயத் துறையில் ரூ. 600 கோடி முதலீடு செய்யப்படும்"

என்று மத்திய உணவு—விவசாய அமைச்சர் திரு. செகசீவன்ராம் கூறினார்.

காஞ்சிபுரம் நகராட்சி அளித்த வரவேற்பு இதழைப் பெற்றுக் கொண்டு அமைச்சர் பேசினார்.

அடுத்த திட்டக் காலத்தில் விவசாயத் துறையில் ஈடுபடுத்தப்படும் ரூ. 600 கோடி சிறுபாசனத் திட்டங்கள், குழாய்க் கிணறுகள் தோண்டுதல் போன்றவற்றில் செலவிடப்பட்டு, பாசனத்துக்கு வழிசெய்யுமென்றும், தானிய உற்பத்தி பெருகுமென்றும் கூறினார்.

நாட்டில் விவசாயிகளில் 90 சதவிகிதம் பேர் சிறிய பட்டாதாரர்கள் என்றும், அவர்களுக்குத் தேவையான வசதிகள் செய்ய இயன்ற எல்லாவற்றையும் அரசு செய்து வருகிறதென்றும் கூறினார்.

அவசியமேற்பட்டால் பம்பு செட்டுகள், குழாய்க் கிணறுகளுக்கான துரப்பணக் கருவிகள் வாங்கக் கடன் உதவுமாறு வர்த்தகப் பாங்கிகள் கேட்டுக்கொள்ளப்படும் என்றார்.

நாட்டில் உணவு உற்பத்தி அமைப்பும், உணவுப் பழக்கமும் மாறி வருவது குறித்து மகிழ்ச்சி தெரிவித்தார்.

"நான் அரிசி அமைச்சனல்ல—வெறும் உணவு அமைச்சன்தான்; இருந்தாலும், அரிசி கோரும் மாநிலங்களுக்கு அரிசியைத் துரிதமாக அனுப்புவதற்குச் சிறந்த அளவுக்கு முயன்றுவருகிறேன்" என்று திரு. செகசீவன்ராம் கூறினார்.

மாவட்ட கலெக்டர் அலுவலகத்தில், அமைச்சர் செகசீவன்ராம் அவர்களுக்குத் தமிழக உணவு அமைச்சர் கே. ஏ. மதியழகன் அவர்கள் விருந்தளித்தார்.

# சாதனைகளைப் பார்த்து வாக்களிப்பீர்!

சென்னை, அக். 15—

"காங்கிரசு ஆட்சிக் காலத்தில், ஆப்பம் சுட்டு விற்பவர்களுக்கு ரூ. 7 ஆக இருந்த வரி தி. மு. க. ஆட்சிக் காலத்தில் ரூ. 1 ஆகக் குறைக்கப்பட்டது.

"சலவைத் தொழிலாளர்கள், முடிதிருத்தும் தொழிலாளர்கள் ஆகியோருக்கு ரூ. 6 ஆக இருந்த வரி இப்பொழுது ரூ. 1 ஆகக் குறைக்கப்பட்டது.

"எட்டாவது வகுப்பு வரையில் இலவசப் பாடப் புத்தகம், மதிய உணவு தருகிறோம்! காங்கிரசு ஆட்சிக் காலத்தில் எட்டாம் வகுப்பு வரை இலவசப் பாடப் புத்தகம் எங்கே வழங்கப்பட்டது?

"கூவம் நதி சிரமைப்புத் திட்டத்தை 15 ஆண்டுக் காலமாகக் காங்கிரசார் கூறினர்; ஆனால், திட்டம் திட்டவில்லை. ஒரு கோடியே இருபத்தைந்து இலட்ச ரூபாய் செலவில் --- அண்ணாவிடம் சொல்லி --- கருணாநிதி முயற்சியால் இப்பொழுது திட்டம் போடப்பட்டுள்ளது.

"இவ்வளவு செய்ததுமட்டுமல்ல -- அவர்கள் காலத்தில் மூன்றரைக் கோடி ரூபாயாக இருந்த மாநகராட்சி வருமானம், இப்போது அதைவிட உயர்ந்திருக்கிறது.

"1959-க்கு முன்பு 'மேயர் எப்படி இருப்பார்' என்று பலருக்குத் தெரியாது. நமது மேயர்கள் மிகச் சாதாரணமாக இப்பொழுது பழகுவதுபோல், அன்றைய மேயர்கள் பழகியதில்லை!

"இவற்றையெல்லாம் சிந்தித்துப் பார்த்து, தி. மு. கழகம் செய்த பணி -- செயயக் காத்திருக்கின்ற பணி ஆகியவற்றை ஆய்ந்து -- மற்ற மாநிலத்தார் வியக்கும் வண்ணம் வெற்றி தேடித் தருவீர்களாக!"

**--அமைச்சர் இரா. நெடுஞ்செழியன்**

(86-வது வட்டத் தேர்தல் பிரச்சாரக் கூட்டத்தில்)

## மதுரை ஆலையில் முற்றுகை போராட்டம்

மதுரை, அக். 14—

தென்னகத்தில் உள்ள பெரிய ஆலைகளில் ஒன்றான மதுரை ஆலையில், 5000-க்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் முற்றுகைப் போராட்டம் நடத்தினர்.

இந்த முற்றுகைப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்கள் எல்லா வாயில்களிலும் நின்றுகொண்டு, முதல் 'ஷிப்டு'க்குச் சென்ற தொழிலாளர்களையும் வெளியே செல்லவிடாமல் தடுத்துவிட்டனர்.

தீபாவளி பண்டிகையை ஒட்டி முன்பணமாக ரூ. 25 தருவதற்கு நிர்வாகத்தினர் மறுத்துவிட்ட காரணத்தினாலேயே எல்லா தொழிற் சங்கங்களைச் சார்ந்த தொழிலாளர்கள் மேற்கண்ட நேரடி நடவடிக்கையில் ஈடுபட்டதாகத் தெரிகிறது.

## கலைக் குழு முகவரி

கவிஞர் ந. மா. முத்துக்கூத்தன் குழுவினரின் 'நான் ஒரு தி. மு. க.' என்னும் கொள்கை விளக்க வில்லுப்பாட்டு நடத்த விரும்புவோர் தொடர்பு கொள்க:—

ந. மா. முத்துக்கூத்தன்
7, தாமோதரர் தெரு,
சென்னை-8.

கலைஞர் நடமாடும் நாடக மன்றத்தாரின் 'காஞ்சித் தலைவன்' எனும் கலை நிகழ்ச்சியும், 'திடீர்த் தியாகி' எனும் தேர்தல் பிரசார நாடகமும் நடத்த விரும்புவோர் தொடர்பு கொள்க:—

கே. ஆர். வேலுத்தங்கம்,
142, குகன் தெரு, புலியூர்புரம்,
சென்னை-24.

'அண்ணா ஆளுகிறார்' எனும் கலை நிகழ்ச்சி நடத்த விரும்புவோர் தொடர்பு கொள்க:—

புதுக்கோட்டை இளங்கோவன்-பூங்கோதை கலைக்குழு, மணீஸ் பேக்கரி, 4, முனியப்ப செட்டித் தெரு, பெரம்பூர், சென்னை-11. தொலைபேசி எண்: 65267.

## இன்னல் இல்லாமல்...

"இன்னல் எனும் தீயினால் தூய்மையாக்கப்படாமல், எந்த நாடும் மேன்மை பெற்றதில்லை."

—கவந்தியார்

## நடக்க இருப்பவை

### பொதுக்கூட்டங்கள்

### 16--10--68

**சென்னை 20-வது வட்டம்**

தி.மு.க. தேர்தல் பிரசாரக் கூட்டம்; மாலை 7 மணிக்கு தப்பு செட்டித் தெருவில்; தலைவர்: சி. சாமிநாதன்; பேசுவோர்: அமைச்சர் மு. கருணாநிதி, என். ஆர். வீரஜின்னு (செட்டியார்), பீர் முகம்மது எம்.எல்.ஏ., அ. செல்வராசன் எம்.சி., கோ. செங்குட்டுவன், கே. எஸ். இலக்குமணன், ந. இராமதாசு.

**சென்னை 48-வது வட்டம்**

தி.மு.க. வேட்பாளர் தி. சு. நல்லதம்பியை ஆதரித்து மாலை 7 மணிக்கு சுந்தரபுரத்தில்; தலைவர்: சி. கே. வேணு; பேசுவோர்: சி. பி. சிற்றரசு எம்.எல்.சி., சி. சிட்டிபாபு எம்.பி., இளம்பரிதி, வீரஜின்னு, வி. கங்காதரன், பி. ஏ. செல்வன், மு. மணவாளன், மைக்கேல்.

**ஆறகளூர்**

எம்.ஜி.ஆர். மன்றச் சார்பில் மாலை 6 மணிக்கு அண்ணா திடலில்; தலைவர்: ஆ. கோவிந்தராசுலு; பேசுவோர்: ஜி. என். பெரியசாமி, டி. கே. மாதவன், எம். மாரிமுத்து எம்.எல்.ஏ., என். கே. இராசு, க. இராமசாமி, அரு. செல்லம்பாயிரம், மற்றும் பலர். (மதுரை தங்கராசு – கண்ணம்மா கலை நிகழ்ச்சி நடைபெறும்.)

**கோ. வடக்கத்தியான்பட்டி**

தி.மு.க. சார்பில் கலைவாணர் திடலில்; தலைவர்: சி. கருப்பையா; பேசுவோர்: தேவகி பாண்டியன், நெல்லை மாறன், இரா. சு. தங்கராசன், ஐ. ஜெயராமன், சுல்தான் சிக்கந்தர் பாட்சா.

**சென்னை 8-வது வட்டம்**

மக்கள் மன்றச் சார்பில் சழக வேட்பாளர் எம். பெருமாளை ஆதரித்து மாலை 7 மணிக்கு பனைமரத் தொட்டி அம்மன் கோயில் எதிரில்; தலைவர்: பா. புஷ்பாகரன்; பேசுவோர்: சி. பி. சிற்றரசு எம்.எல்.சி., வி. எஸ். கோவிந்தராசன் எம்.எல்.ஏ., தி. ந. மதிவாணன், ஆர். எல். லிங்கராஜ், கே. ஈ. சம்பந்தம், சி. பாலன், கு. சம்பந்தமூர்த்தி, சு. இராமதாசு.

**சென்னை 27-வது வட்டம்**

தி.மு.க. வேட்பாளர் கி. எத்திராசனை ஆதரித்து இரவு 8 மணிக்கு பி. பி. அம்மன் கோயில் தெருவில்; தலைவர்: ஜி. குசேலர் எம்.பி.; பேசுவோர்: அமைச்சர் இரா. நெடுஞ்செழியன், பி. சிவசங்கரன் எம்.பி., முரசொலி மாறன் எம்.பி., எம்.எம். பீர்முகம்மது எம்.எல்.ஏ., கோமகன், துரை செல்வராசன், பெ. த. இன்மொழியன், ஆ. கோவிந்தராசன்.

**சென்னை 52-வது வட்டம்**

சழக வேட்பாளர் மா. மதுரையை ஆதரித்து மாலை 7 மணிக்கு அகரம் பாலவாயல் ரோடில்; தலைவர்: பொன்னம்பலம்; பேசுவோர்: அமைச்சர் மு. கருணாநிதி, கோவை செழியன், வி. எஸ். கோவிந்தராசன் எம்.எல்.ஏ., வேலூர் நாராயணன் எம்.சி.

**சென்னை 10-வது வட்டம்**

தி. மு. க. சார்பில் இரவு 8 மணிக்கு கிழக்குக் கல்லறைத் திடலில்; தலைவர்: வி. பி. சாரதி; பேசுவோர்: அமைச்சர் செ. மாதவன், நடிகமணி டி. வி. நாராயணசாமி, என். ஆர். வீரஜின்னு.

**சென்னை 115 வது வட்டம்**

கலைஞர் பொதுப் பணிமன்றச் சார்பில் புதூர் அசோக் நகர் அரசினர் உயர் நிலைப்பள்ளி எதிரில்; தலைவர்: டி. ஆர். செயராமன்; பேசுவோர்: அமைச்சர் கே. ஏ. மதியழகன், என். வி. நடராசன் எம்.எல்.சி., நடிகமணி டி.வி.நாராயணசாமி எம்.எல்.சி., க. அறிவழகன் எம்.எல்.சி., எம். கோபால் எம்.எல்.ஏ., எம். இந்திரா, மா. ந. செயச்சந்திரன்.

## பொறுப்பில் இல்லாதவரின் பொறுப்பற்ற வாக்குறுதி!

சென்னை, அக். 16—

"மாநகராட்சி சார்பில் சுகாதாரம், சாலை வசதி, மருத்துவ வசதி, கல்வி வசதி, விளக்கு வசதி, வீட்டு வசதி போன்ற பொது நன்மைகளில்தான் கவனம் செலுத்த முடியும். மக்களின் எல்லாக் குறைகளையும் காங்கிரசு கட்சியால் தீர்த்துவிட முடியாது!

"'வறுமை ஒழிய மாநகராட்சித் தேர்தலில் காங்கிரசுக்கே ஓட்டுப் போடுங்கள்' என்று பொறுப்பிலே இல்லாத சுப்பிரமணியம் பேசலாம்; அவருக்கு இருக்கின்ற பொறுப்பெல்லாம், த. நா. கா. க. தலைவர் பொறுப்புதான்--அதுவும் தடுமாறிக்கொண்டிருக்கிறது! இந்நிலையில், வாக்குறுதிகளை அள்ளி வீசுகிறார்!

"ஏழை மக்களின்பால் அக்கறை கொண்ட அரசு அண்ணாவின் அரசு என்பதை உணர்ந்து, கழக வேட்பாளர்களை வெற்றிபெறச் செய்து--- மாநகராட்சிக்கு மீண்டும் அனுப்பிவைக்குமாறு வேண்டுகிறேன்."

**-- மு. கருணாநிதி**

(55-வது வட்ட தேர்தல் அலுவலகத் திறப்பு விழாவில்)

## சென்னை 117-வது வட்ட தேர்தல் அலுவலகம்

### முரசொலி மாறன் திறந்துவைத்தார்

11—10—68 காலை 10-மணியளவில் சைதை ஜோன்ஸ் ரோடில், 117-வது தி. மு. கழகத் தேர்தல் பணிமனையை நாடாளுமன்ற உறுப்பினர் முரசொலி மாறன் திறந்துவைத்தார்.

முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் திரு. காஞ்சி. மணிமொழி தலைமை தாங்கினார்.

திரு. சி. பி. சிற்றரசு எம்.எல்.சி. அவர்கள் சழக வேட்பாளர் தாடி எஸ். பி. இரத்தினம் அவர்களை ஆதரித்தும் வாழ்த்தியும் சழகத் தோழர்களின் கடமை என்ன என்பதுபற்றியும் பேசினார்.

விழாவிற்கு மாநகராட்சிமன்ற உறுப்பினர் சைதை சம்பந்தமும், கழக -- தோழமைக் கட்சித் தோழர்களும், மற்றும் ஏராளமான பொதுமக்களும் வந்திருந்தனர்.

முடிவில் தோழர் தங்கத்துரை நன்றி நவின்றார்.

## மாநகராட்சிப் பள்ளித் திறப்பு விழா

சென்னை 48-வது வட்டம் சுந்தரபுரத்தில் கட்டப்பட்டுள்ள மாநகராட்சி மாடிப் பள்ளியை 17-10-68 மாலை 5-மணிக்கு பொதுப் பணித் துறை அமைச்சர் திரு. கருணாநிதி திறந்து வைப்பார்; இவ்விழா, மேயர் டாக்டர் அபிபுல்லாபேக் தலைமையிலும்—அமைச்சர் சத்தியவாணிமுத்து முன்னிலையிலும் நடைபெறும்; வரவேற்பு தி. சு. நல்லதம்பி எம்.சி.

சென்னை

## மாநகராட்சியின் சீரிய செயல்

### ஆந்திர கேசரிக்குத் தலைநகரில் சிலை

சென்னை, அக். 15—

முன்னாள் தமிழக—ஆந்திர முதலமைச்சரும், பழம்பெரும் காங்கிரசுத் தலைவருமான காலஞ்சென்ற டி. பிரகாசம் அவர்களின் உருவச் சிலையை சென்னையில் நிறுவ மாநகராட்சிமன்றம் முடிவு செய்துள்ளது தெரிந்ததே.

இந்தச் சிலையை சென்னை உயர் நீதிமன்றத்திற்கு அருகில்—சென்னையின் முக்கிய பகுதியான பாரி முனையில் வைக்க மாநகராட்சி முடிவு செய்துள்ளது.

இம்மாதம் 19-ம் நாள் இந்தியக் குடியரசுத் துணைத் தலைவர் திரு. வி. வி. கிரி இதனைத் திறந்து வைக்கிறார்.

இவ்விழாவுக்குத் தமிழகப் பொதுப்பணி அமைச்சர் திரு. மு. கருணாநிதி தலைமைவகிப்பார்.

சில திங்களுக்குமுன், தமிழக முதலமைச்சர் அறிஞர் அண்ணா அவர்கள் ஆந்திரத்திற்குச் சென்று அங்கு ஒரு நிகழ்ச்சியில் கலந்துகொண்டு பேசுகையில்,

"தமிழகத் தலைநகரில் ஆந்திரகேசரி டி பிரகாசம் அவர்களின் உருவச் சிலையை அமைக்க ஆவன செய்வோம்"

என்று ஆந்திர மக்களிடையே அறிவித்ததற்கிணங்க, சென்னை மாநகராட்சிமன்றம், ஆந்திர கேசரியின் உருவச் சிலை அமைக்க ஆவன செய்தது.

## மருத்துவக் கல்லூரிக்கான மாணவர் தேர்வு

### 'ரிட்' மனுக்கள் தள்ளுபடி

சென்னை, அக். 14—

தமிழக மருத்துவக் கல்லூரிகளில், மாணவர்கள் சேர்க்கப்பட்ட விதத்தை எதிர்த்து உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட 200 'ரிட்' மனுக்களையும், உயர் நீதிமன்ற 'டிவிஷன் பெஞ்சு' தள்ளுபடி செய்து தீர்ப்பளித்தது.

ஆனால், 'காலியாக உள்ள 19 இடங்களுக்கு, 'பிற்பட்ட வகுப்பினர்' எனக் கூறப்படும் இருவர் கோரிக்கையைக் கவனிக்கலாம்' என நீதிபதிகள் யோசனை கூறினர்.

# மொட்டைத் தலைக்கும் முழங்காலுக்கும் முடிச்சு!

## காங்கிரசார் கூற்றுபற்றி கருணாநிதி

சென்னை, அக். 14—

"புளூ காய்ச்சல் பரவிய நேரத்தில், அதைத் தடுப்பதற்குப் பல்வேறு தடுப்பு முறைகள் சுகாதாரத் துறையினராலும், சுகாதார அமைச்சர் சாதிக் பாட்சா அவர்களாலும் மேற்கொள்ளப்பட்டன.

"'புளூ காய்ச்சல் பரவியதால் தி. மு. கழகத்தைத் தோற்கடிக்க வேண்டும்' என்று காங்கிரசுக்காரர்கள் பேசுகிறார்கள்.

"இவர்கள் மோதிக்கொள்ள வேண்டிய இடம் கப்பலே தவிர மாநகராட்சி அல்ல! புளூ காய்ச்சலுக்கும்—மாநகராட்சிக்கும் என்ன சம்பந்தம்? மக்களை நோயிலிருந்து விடுவிக்க மாநகராட்சி மன்றம் உரிய நேரத்தில் உரிய நடவடிக்கைகளை எடுத்திருக்கிறது!

"'400 கோடி ரூபாயில் இராணுவத்தை வைத்திருக்கிறாயே -- அந்தப் புளூ கிருமிகளையெல்லாம் ஏன் தடுக்காமல் நாட்டுக்குள் பரவவிட்டாய்?' என்று நாங்கள் கேட்கமாட்டோம்—'அறிவு' என்ற ஒன்று இருக்கின்ற காரணத்தால்!

"தொத்து நோய் பரவுகின்றதென்றால், அது, 'யார் ஆளுகிறார்கள்' என்று பார்த்துக்கொண்டு வருவதில்லை! ஆனால், வந்துவிட்ட நோயைத் தடுப்பதுதான் நிர்வாகத்திலுள்ளவர்கள் கடமையாகும்; அந்தக் கடமையை மாநகராட்சியினர் செய்தனர்!"

திராவிட முன்னேற்ற கழகத்திற்காக. திரு. இரா. செழியன் எம்.ஏ., எம்.பி. அவர்களை ஆசிரியராகவும், வெளியிடுபவராகவும், அச்சிடுபவராகவும் கொண்டு [illegible] அச்சகத்தில் (24, [illegible] ரோட்டுத் தெரு, சென்னை-18) அச்சிட்டு வெளியிடப்பெற்றது.